# சு.வேணுகோபால் "கார்காலம்" சிறுகதையில் விழுமியக் கூறுகள்

*மு. கற்பகலெட்சுமி*
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
வெ.ப.சு. தமிழியல் ஆய்வு மையம், தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி

*முனைவர் மீ. அஸ்வினி கிருத்திகா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7742

ஒவ்வொரு இலக்கியமும் ஏதோ ஒரு வகையில் மனித மனத்தை செம்மைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மனித வாழ்க்கை நெறிமுறைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி இலக்கியம் ஆகும். மனிதன் இந்நிலவுகில் சிறப்பாக வாழ்வதற்கு சில விழுமியக் கூறுகளைப் பின்பற்ற வேண்டும். அவ்விழுமியங்களைப் பற்றி சு.வேணுகோபாலின் "கார்காலம்" சிறுகதை வழியாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## எழுத்தாளர் சு.வேணுகோபால் அறிமுகம்

"கார்காலம்" சிறுகதையின் ஆசிரியர் தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருகே போடி அம்மாபட்டியில் ந.சுருளிவேல், பொன்னுதாயி இணையருக்கு 20.05.1967-இல் மகனாகப் பிறந்தவர்.

தேனி மாவட்டத்தில் விவசாயப் பின்னணியில் பிறந்து வளர்நத்வர். விவசாயம் சார்ந்தும், மண் சார்ந்தும், கிராமப் பின்னணியைக் கொண்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். விவசாயி, எழுத்தாளர், பேராசிரியர் பன்முகம் கொண்ட இவர்.

நவீனத் தமிழிலக்கிய எழுத்தாளர். சிறுகதை, குறுநாவல், நாவல், விமர்சனக் கட்டுரைகள் போன்ற பல்வேறு இலக்கிய வகைகளை எழுதி வருகிறார்.

சமகால முதன்மைப் படைப்பாளிகளில் ஒருவராக இருக்கிறார். பல இலக்கியக் கருத்தரங்குகளில் எழுத்துப் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டு தன் எழுத்துலக அனுபவங்களைப் பகிர்ந்து வருகிறார்.

### விருதுகளும், பரிசுகளும்

1. பாஷா பரிஷத் விருது சிறுகதைத் தொகுப்பு (வெண்ணிலை)
2. திருப்பூர் கலை இலக்கியப் பேரவை விருது (வெண்ணிலை)
3. 2006-ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்றது.
4. தன்னறம் இலக்கிய விருது 8.1.2003 விருதுடன் விருதாளர் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகைப் பெற்றார்.

விவசாயம் சார்ந்தும், மண் சார்ந்தும் மனிதர்கள் சார்ந்தும் எழுதுவதற்கு அவருடைய வாழ்க்கை அனுபவத்தை உறுதுணையாகக் கொண்டு எழுதி வருகிறார். இவரது எழுத்தானது வெறும் தகவல்களாக இல்லாமல் காட்சிப்படுத்தும் பாணியில் விவரிப்பது இவரின் தனிப்பட்ட உத்திமுறையாகும். சு.வேணுகோபாலின் "கார்காலம்" சிறுகதையில் விழுமியக் கூறுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### விழுமியம் விளக்கம்

"மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பனவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்து ள்ளதே விழுமியம் எனப்படுகிறது"[1]

மனிதனின் எண்ணமானது தீய செயல்களை அகற்றி நல்ல செயல்களைச் செய்ய நாடுவதும், நலம் விளைவிக்கக்கூடிய எத்தகையச் செயல் எதைச் செய்தாலும் அறச் செயலாகும்.

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் ஆகும். அவ்வறம் ஒழுக்கம், கடமை, ஈகை, தொண்டு ஆகும். மனிதன் தன்னலம் கருதாமல் பொதுநலத்தோடு வாழ்வாங்கு வாழ்வதே அறம் ஆகும். அதை ஔவையார்,

**"அறம் செய விரும்பு"**

என்று ஆத்திச்சூடியில் அறச் செயல்களை மனிதன் விருப்பத்தோடு செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

### விழுமியக் கூறுகள்

"ஒரு சமுதாயத்தின் நெறியியல் சார் (Normative components) கூறுகளாக விழுமியங்கள் (Values), நெறிமுறைகள் (Norms), விதிகள் (Laws) குடி வழக்குகள் (Folkways) வழக்கப்பாடுகள் (Morals) மரபாண்மைகள் (Ethos) அன்பளிப்புகள் (Sanctions) வழக்கங்கள் (Customs) பழக்கங்கள் (Habits) முதலியவை அமைகின்றன. இவற்றில் விழுமிசுயங்கள் என்பவை ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ, அவையல்லாவற்றையும் குறித்து நிற்கின்றன."[2]

மனிதன் சமுதாயத்தைச் சார்ந்து வாழ்வதால் அற விழுமியங்களை அன்றாட வாழ்வில் கடைபிடித்து வாழ வேண்டும்.

### விழுமியங்களின் வகைகள்

சமுதாய மதிப்புகளாகிய விழுமியங்கள் இரண்டு வகைப்படும்,

1. நடத்தை சார்பான விழுமியங்கள்
2. செயல்பாடு சார்பான விழுமியங்கள்

"கார்காலம்" சிறுகதையில் சமுதாய மதிப்புகளாகிய விழுமியங்கள்" காணப்படுகின்றன. அவற்றை நடத்தை சார்பான விழுமியங்கள், செயல்பாடு சார்பான விழுமியங்கள் என இரு வகையாகப் பிரித்து அறியலாம்.

### நடத்தை சார்பான விழுமியங்கள்

நடத்தை என்பது நடைமுறையில் பல பொருள் நிலைகளில் வழங்கப்பட்டாலும், சிறப்பாக அது ஒழுக்கத்தையே குறித்து நிற்கின்றது.

"நடத்த கெட்ட பய", "நடத்த கெட்ட பயலுஞ்சிறுக்கியும்", நடத்த கெட்ட குடும்பம்", "ஊர் நடத்த கெட்டுப் போச்சு" போன்ற நாட்டுப்புற வழக்காறுகள் நடத்தை என்பதை ஒழுக்கம் என்ற பொருளிலேயே குறித்து வழங்குகின்றன"[4]

*"நீங்க ஏன் அவனுக்கு இவ்வளவு பெரிய தொகையைத் தந்தீங்க, எங்கிட்ட கேக்க வேணாமா ஊதாரி நாயி எம் பொழப்ப பூராம் கெடுத்து நாசமாக்க காத்திருக்கான் தாயோளி அவன் பல்லைக் கடித்தான்."*[5]

*பிள்ளைகள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் தன்னிச்சையான முறையில் செயல்படக் கூடாது என்றும், பெற்றோர்களின் சொற்படி கேட்டு நடக்க வேண்டும் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் "கார்காலம்" சிறுகதையில் தலைமை மாந்தர் ஜெயராம் கூற்று வாயிலாக தெளிவுப்படுத்துகிறார்.*

*நடத்தை சார்பான விழுமியங்கள் மூன்று நிலைகளில் காணப்படுகின்றன.*

1. *தனிநபர் சார்பான விழுமியங்கள்*
2. *குடும்பச் சார்பான விழுமியங்கள்*
3. *பொதுவான விழுமியங்கள்*

*தனிநபர் சார்பான விழுமியங்கள் தனிநபர் ஒழுக்கத்தினை வலியுறுத்தி அமையும் விழுமியங்கள் தனிநபர் நடத்தை சார்பான விழுமியங்கள் ஆகும்.*

*தனிநபர் பிறமனிதர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், வயதில் சிறியவர்கள், பெரியவர்களை மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும்",*

***"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"***

***"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்"***

*என்ற கருத்துகளுக்கு ஏற்ப பெற்றோர்கள் சொற்கேட்டு நடந்தால் வாழ்க்கையில் மதிப்பும், மரியாதையும் பெற்று வாழலாம்.*

*"பெரியவர்கள் தன் வாழ்வியல் ரீதியாக அனுபவமுடையவராக இருப்பதால் அவர்கள் சொல்வது அனுபவமற்றற சிறியவர்களால் மீறப்படலாம். அப்படி மீறாமல் அனுபவமுள்ள பெரியவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற விழுமியமாகும்"*[6]

*"ஜெயராம், கொடுக்ககுறப்போ உங்க அப்பாவ கூட்டிட்டு வான்னு தான் சொன்னேன். பீஸ் கட்டணும் மண்ணா எனக்கு ஒரு அமௌண்ட் வர வேண்டியதா இருக்கு வந்ததும் தந்திடுறேன்னு கெஞ்சினான்."*[7]

*"அவங்கிட்டதான் கொடுத்தீங்க அவங்கிட்டயே வசூல் பண்ணுங்க வீட்டுக்கு வரட்டும் தெருப் பொறுக்கிய செருப்பாலயே சாத்தறேன்."*[8]

*"சரவணனை துவைத்தால் தான் சரிப்பட்டுவரும்"*[9]

*"என் பையன் இந்த வயசில பிராடுதனம் பண்ணி வச்சிருக்கான் ராமமூர்த்தி"*[10]

*"ஒன்ன தெருத்தெருவா சுத்தவிடுறேன் அப்பத்தான் நீ உருப்படுவ"*[11]

*"சண்டியர்னு நெனப்பு நாய்க்கு உனக்கெல்லாம் செல்லு வேற இரு அங்கயே வாங்கி உடைக்கிறேன் பெரிய அம்பானின்னு நெனப்பு இவனுக்கு ஆத்திரம் அடங்கும் வரை சாத்தணும் கை கால் உடைந்தாலும் சரி"*[12]

*"அப்பா இங்க என்று சொல்வதற்குள் மட்டு மட்டுவென்று காதுக்கு மேல் அடித்தான். தலையை நிமிர்த்தி பின்வாங்க கண்ணத்தில் பளார் என்று அறை விழுந்தது."*[13]

*இளையவர் மீது ஆதிக்கம் செலுத்து தலின் விளைவே தனிநபர் விழுமியமாகும். பெரியவர் சொல் கேட்டு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும். அவர்களை மதித்து எல்லாச் செயலிலும் அவர்களின் அறிவுரைகளை மதித்து செயல்பட வேண்டும். கண்டித்து திருத்தும் போது நல்ல மனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களிடம் அன்புடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும் என்று "கார்காலம்" சிறுகதையில் ஆசிரியர் வலியுறுத்துகிறார்.*

### குடும்பச் சார்பானவை

*இல்லறத்தில் சிறப்பான குடும்ப உறுப்பினர்களாகிய கணவன், மனைவி நடத்தைகளையும், குடும்பத்தின் பொது நிலை நடத்தைகளையும் அடிப்படையாக அமையும் விழுமியங்கள் குடும்பம் சார்பான விழுமியங்கள் ஆகும்.*

"கொண்டவனுக்குத் துரோகம் செய்யக் கூடாது அடுத்தவன் மனைவியை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளக் கூடாது."[14]

ஆகிய கலாச்சார அத்து மீறல் "கார்காலம்" சிறுகதையில் இடம் பெறவில்லலை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் பண்பாட்டின்படி கதை மாந்தர்கள் பற்றி "கார்காலம்" சிறு கதை வழியாக ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

**பொதுவானவை**

சமுதாய நடத்தை சார்பாக அமையும் விழுமியங்கள் பொதுவான விழுமியங்கள் ஆகும்.

"சமுதாயத்தில் ஒரு நபர் மற்றொரு நபருடன் நெருக்கமாகப் பழகுவதால் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல், பாலியல் சிக்கல் ஆகியவற்றால் சமுதாய உறவுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்கும் முகமாக உருவான மதிப்பே சமுதாய விழுமியமாகும்"[15]

பொதுவான நடத்தை சார்பாக அமையும் விழுமியங்களில் தனிநபர் தன்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்வதும் என்றும் அதிகமாக சிநேகிதம் கூடாது என்றும் மனித நடவடிக்கைகளில் ஒன்றான பணப் பரிவர்த்தனைப் பற்றி விளக்குகிறார்.

"சும்மாதான் காயலான் கடை போடலாம்னு சொல்லியிருநதென்ல ஒரு எடம் வருது கையில் பெரிய தொகையும் இல்ல நீ ஒரு இருபது ரூவா பெரட்டித் தந்தா பிடிச்சிடலாம். உனக்கு தேவைப்படுறப்போ பெரட்டி விடுகிறேன் மெயின் ரோட்டில வருது எனக்கும் அந்தத் தொழில்தான் தெரியும்."[16]

"எனக்கு அவங்கிட்ட பணத்த எப்படி வாங்குறதுன்னு தெரியும்"[17]

"நாற்பத்திரண்டாயிரம் முன் அட்வான்ஸ், வாடகை இரண்டாயிரம் அதுக்கு மேல ஒரு காசு குறைக்க முடியாதுன்னு சொல்றாரு."[18]

"ஆமா சார் ஹாஸ்டல் பேலன்ஸ் பீசை கட்டினேன். ஒரு மாசம் டைம் கொடுங்க சார் தப்பு எம்மேலதான் சார் இனி இழுத்தடிக்க மாட்டேன் சார்"[19]

பணத்தைப் பிரதானமாக நம்புதல் பணம் சம்பாதிக்கிறவன் பெரிய மனிதன் என்ற மதிப்பீடு ஒருவன் பணம் சம்பாதித்து விட்டால் சமூகத்தில் மதிப்பு மரியாதை ஏற்படுகிறது. உறவுகளிடம் கடன் வாங்குவதால் பிரிவினை ஏற்படுகிறது. "கடும் உறவு கண்ணைக் கெடுக்கும்" என்ற பழமொழிக்கு ஏற்ப மனிதனை மனிதனாகப் பார்க்காமல் பணத்தைக் கொண்டு மதிப்பிடும் அளவிற்கு இன்று பணம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பதை ஆசிரியர் விளக்குகிறார்.

**செயல்பாடு சார்பானவை**

செயல்பாடு சார்பான விழுமியங்கள் அனைத்தும் அறக்கோட்பாடுகளையே பெரிதும் சார்ந்துள்ளன.

"ஒரு சமூகக் கூறு தான் சார்ந்துள்ள சமூக அமைப்பு நிலையைப் பெற்று உதவும் முறையில் ஆற்றிடும் பங்கைச் செயல்பாடு என்று குறிப்பிடுவர்."[20]

புற உலக நடப்பியல் நிகழ்வுகளைச் சார்ந்து நிற்கும் கருத்துக்கள் அல்லது கருத்தியல்கள் சமுதாய விழுமியங்களாகக் கருதப்படுகின்றன. இச்சமுதாய விழுமியங்கள் செயல்பாடு சார்பான விழுமியங்களாக அமைகின்றன. அவை தனிநபர், குடும்பம், சமுதாயம் என்ற நிலையில் அமைந்துள்ளன.

**தனிநபர் சார்பானவை**

தனிநபரின் நடவடிக்கை புற உலகச் செயல்பாட்டிற்கு எவ்வாறு உதவுகின்றது என்ற அடிப்படையில் அமையும் விழுமியங்கள் தனிநபர் செயல்பாடு சார்பான விழுமியமாகும். அறம் சார்ந்த செயல்பாடும் அனைத்தும் இதில் அடங்கும். கல்வி, நட்பு, ஈகை, விருந்தோம்பல் தனிநபர் செயல்பாட்டில் அடங்கும்.

***“நல்லா படிச்சுக்கோ”[21]***

***“ஒரு பொட்டப்பிள்ள வேற படிச்சிட்டிருக்கு சார்”[22]***

*இவளை நல்லபடியாக படிக்க வைத்து விட்டால் போதும் சின்னச்சின்ன குறைகளை இந்த கல்வி மேக்கோப்பு செய்துவிடும் என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் பெண் பிள்ளைகளுக்கு கல்வி மிக அவசியம். பெண் குழந்தைகள் தனியாக இயங்கும் ஆற்றல் பெற்று சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்று கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஆசிரியர் கார்காலம் சிறுகதையில் குறிப்பிடுகிறார்.*

**பொதுவானவை**

*சமுதாயப் பொது நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும் விழுமியங்களை சமுதாயச் செயல்பாடு சார்பான விழுமியங்கள் எனலாம். இதில் அறம், சுகாதாரம், சடங்குகள், நம்பிக்கைகள். கனவு, வழிபாடுகள், திருமணம் அனைத்தும் செயல்பாடு சார்பான விழுமியங்களில் அடங்கும்.*

**அறம்**

*“அறம் மனிதன் தனக்காக வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்.”[23]*

*மனித சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நடைபெறும் ஏற்ற வகையில் நலம் விளையக்கூடிய செயல் எதைச் செய்தாலும் அது அறச்செயலாகும்.*

*“சார் பையன் நல்லா படிச்சு வந்து ருவானா சார்?”[24]*

*“வருவான் நல்ல மனுசனா வருவான்.”[25]*

*சமுதாயத்திற்கு நல்ல செயல்களைச் செய்தால் நன்மை கிட்டும். தீமை செய்தால் கெடுதலை சந்தித்து ஆகவேண்டும். மனிதனின் வாழும் வாழ்க்கையானது பிறருக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் ஒருவருக்கொருவர் உதவி செய்து பாதுகாப்புடன் வாழ வேண்டும் நன்மையான செயல்களை மட்டும் தான் செய்ய வேண்டும் என்று “கார்காலம்” சிறுகதையின் வாயிலாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.*

**நட்பு**

*மனித உறவுகளில் மேலானதாகக் கருதப்படுவது நட்பு. கூடா நட்பும், தீ நட்பும் நம்மை தவறான பாதைக்கு அழைத்துச் சென்றுவிடும்.*

***“உடுக்கை இழந்தவன் கைபொல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு”***

***(குறள்: 788)***

*நட்பு எதையும் எதிர்பாராமல் உதவி செய்யும் தன்மை கொண்டது. “கார்காலம்” சிறுகதையில் சரவணன் தன் நண்பன் ராகவனுக்கு ஹாஸ்டல் பீஸ் கட்டுவதற்கு பைனான்ஸில் பணம் வாங்கி கொடுத்தான்.*

**மனித நேயம்**

*நடைமுறை வாழ்வில் கருணையோடு செய்யும் செயல் தான் மனித நேயம் ஆகும்.*

*சக மனிதன் துயரும்போது உதவும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும்.*

*“கண்ணீருக்கும் கஷ்டத்துக்கும் இளகுற வயது இதயம் இளசா இருக்குறப்போ இதுக்கு மேலயும் செய்யும் உங்களுக்கு கஷ்டத்தைப் பற்றி பயம் அவங்களுக்கு உதவுறதுங்கிற உன்னத துணிச்சல்.”[26]*

*மனித குலத்தின் சிறப்புகளில் ஒன்றானது மனித நேயம் ஆகும். பிறர் துன்பத்தை கண்டு இரங்குவதும், அதனைப் போக்க முயல்வதும், வறியவர்களுக்கு உதவி செய்வதும் எதிர்பாராது செய்யும் உதவி மனித நேயமாகும்.*

**தொகுப்புரை**

*தனிமனித விழுமியங்களான அறம், கல்வி, ஈகை, நட்பு, மனிதநேயம் போன்ற விழுமிங்களை தனிநபர் சார்பானவை. செயல்பாடு சார்பானவை பொதுவான*

விழுமியங்களை பற்றி சு.வேணுகோபால் சிறுகதையான 'கார்காலம்'சுசு கதையின் வழியாக அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்


1. இணையதளம்
2. சீ.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.169.
3. ஆ.திருநாகலிங்கம், புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக் கதைகள் காட்டும் சமுதாயம், ப.154.
4. மேலது., ப.154.
5. சு.வேணுகோபால், கார்காலம், ப.15.
6. ஆ.திருநாகலிங்கம், மு.கூ.நூ., ப.155.
7. சு.வேணுகோபால், மு.கூ.நூ., ப.15.
8. மேலது., ப.15.
9. மேலது., ப.16.
10. மேலது., ப.17.
11. மேலது., ப.18.
12. மேலது., ப.18.
13. மேலது., ப.19.
14. ஆ.திருநாகலிங்கம், மு.கூ.நூ., ப.155.
15. மேலது., ப.156.
16. சு.வேணுகோபால், மு.கூ.நூ., ப.12.
17. மேலது., ப.15.
18. மேலது., ப.17.
19. மேலது., ப.21.
20. ஆ.திருநாகலிங்கம், மு.கூ.நூ., ப.156.
21. சு.வேணுகோபால், மு.கூ.நூ., ப.14.
22. மேலது., ப.20.
23. முனைவர் முத்து இலக்குமி, புனைகதை இலக்கியத் திறனாய்வு, ப.57.
24. சு.வேணுகோபால், மு.கூ.நூ., 22.
25. மேலது., ப.22.
26. சு.வேணுகோபால், மு.கூ.நூ., ப.22.